
# P6 PRELIMINARY TESTPAPER 14

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை/கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை/கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



| | | |
|---|---|---|
| பள்ளி முடிந்து | கடத்திச் சென்றனர் | உடைந்த புட்டி (Bottle) |
| வீடு திரும்பினான் | பாழடைந்த வீடு | கயிற்றை அறுத்தான் |
| உந்து வண்டியில் | கட்டிப்போட்டு | வழிப்போக்கர் |
| கடத்தல்காரர்கள் | காவல் இருந்தான் | |

## 'அ' பிரிவு

### A1 வேற்றுமை

**Q1 முதல் Q6 வரையுள்ள இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

பள்ளி விடுமுறையில் பாலன் விலங்கியல் தோட்டத்திற்குச் சென்றான். அவன் தன் ____( 1 )_____ சென்றான். அவர்கள் தங்களுக்கு வேண்டிய _____( 2 )_____ எடுத்துச் சென்றனர். அவர்கள் முதலில் நுழைவுக் கட்டணத்தைச் செலுத்தி விட்டு உள்ளே சென்றனர். பாலனுக்கு மிருகங்களைப் பற்றி அறிந்து கொள்ள மிகவும் விருப்பம். அவன் மிருகங்களைப் பற்றிக் குறிப்புப் புத்தகத்தில் _____( 3 )_____ குறிப்பு எழுதிக் கொண்டான். பின்னர் _____( 4 )_____ புகைப்படம் எடுத்தான். பிற்பகலில் அவர்களுக்குப் பசித்ததால் அவர்கள் _____( 5 )_____ அடியில் அமர்ந்து உணவு உண்டனர். அதன் பிறகு அவர்கள் அங்கிருந்த _____( 6 )_____ நினைவுப் பொருள்கள் வாங்கினர். மிருகங்களைக் கண்டு களித்த மகிழ்ச்சியில் வீட்டிற்குச் சென்றனர்.

1. 1. பெற்றோருக்கு
   2. பெற்றோருடன்
   3. பெற்றோரின்
   4. பெற்றோரால் ( )

2. 1. உணவுப்பொருள்களோடு
   2. உணவுப்பொருள்களின்
   3. உணவுப்பொருள்களை
   4. உணவுப்பொருள்களில் ( )

3. 1. பேனாவுடன்
   2. பேனாவிலிருந்து
   3. பேனாவுக்கு
   4. பேனாவால் ( )

4. 1. மிருகங்களின்
   2. மிருகங்களோடு
   3. மிருகங்களிடம்
   4. மிருகங்களால் ( )

5. 1. மரத்தின்
2. மரத்திற்கு
3. மரத்தால்
4. மரத்திலிருந்து ( )

6. 1. கடைக்கு
2. கடையின்
3. கடையிலிருந்து
4. கடையுடன் ( )

**A2 செய்யுள் / பழமொழி**

**Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிரப்புவதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)**

7. வைகறைத் துயில் ____________________.

(1) எடு

(2) அழு

(3) எழு

(4) இழு ( )

8. முதல் கோணல் ____________________ கோணல்.

(1) மற்றும்

(2) முற்றும்

(3) சுற்றும்

(4) சற்றும் ( )

9. கைப்பொருள் தன்னின் ____________________ கல்வி .

(1) மெய்ப்பொருள்

(2) எப்பொருள்

(3) அப்பொருள்

(4) வரும்பொருள் ( )

10. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
_______________ எல்லாம் மழை.

1. காப்பதூம்
2. நடப்பதூஉம்
3. கொடுப்பதூஉம்
4. எடுப்பதூஉம் ( )

11. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
_______________ செய்து விடல்.

1. புண்ணியம்
2. நன்னயம்
3. தர்மம்
4. கருமம் ( )

12. வருமுன்னர்க் _______________ வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

1. கற்காதவன்
2. கல்லாதவன்
3. காவாதான்
4. கற்றவன் ( )

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

முற்காலத்தில் குறிஞ்சி என்னும் ஒரு நாடு இருந்தது. அது இயற்கை வளம் மிகுந்தது. அந்நாட்டை மாறன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் ஒரு பெருவீரன். அவனைக் கண்டாலே பகைவர்கள் அஞ்சி நடுங்குவர். வீரம் மிகுந்த அவனிடத்தில் பிறருக்கு உதவும் <u>தன்மையும்</u> நிறைந்திருந்தது. அவன் புலவர்கள் மேல் பெருமதிப்பு வைத்திருந்தான். புலவர்கள் நாள்தோறும் அவனைத் தேடி வருவார்கள். மாறன் அவர்களுக்கு ஏராளமான பொருள்களை வழங்கி மகிழ்ந்தான்.

வீரமும் கொடைத்தன்மையும் நிறைந்திருந்த அவனிடத்தில் சில தீய குணங்களும் அமைந்திருந்தன. அவன் எப்போதும் போர் செய்வதில் ஆசை கொண்டிருந்தான். பகைவர்களை வென்று அவர்களைத் <u>கொடுமைப்படுத்துவதில்</u> அதிக விருப்பம் உடையவனாக விளங்கினான். அவனுடைய இந்தக் கொடிய செயலைக் கேள்வியுற்றவர்கள் அவனுடன் போர் செய்ய நடுங்கினர்.

மாறனுக்குப் பகைவனாக மருதன் என்பவன் தோன்றினான். அவனும் மாறனைப் போல் பெருவீரனாக விளங்கினான். அவன் பொன்னி நாட்டை ஆட்சி செய்து வந்தான். ஒரு முறை மருதன் குறிஞ்சி நாட்டின் ஒரு பகுதியைத் தாக்கி, அங்கிருந்து ஏராளமான பொருள்களைக் கவர்ந்து சென்றுவிட்டான். இதனால் <u>ஊக்கம்</u> பெற்ற மருதன், மாறனைத் தான் வெற்றி கொள்ள முடியும் என்று நம்பினான். எனவே, அவன் மாறனுடன் போர் செய்யப் புறப்பட்டான்.

மருதன் பெருவீரனாக இருந்தாலும், போரில் மாறனை எதிர்த்து நிற்க முடியவில்லை. மாறனுடைய வீரத்தைக் கண்டு மருதன் அயர்ந்து போனான். அவனுடைய குதிரைப் படைகள் மருதனுடைய யானைப் படை முன் நிற்க முடியாமல் தோற்று ஓடின. ஆதலால், மருதன் தான் தப்பினால் போதும் என்ற முடிவுக்கு வந்து, குறிஞ்சி நாட்டிலிருந்து ஓடினான். மாறன் அவனைத் துரத்திச் சென்று கைது செய்தான்.

மருதனை வென்றும், அவன் நாட்டிலுள்ள பொருள்களை எல்லாம் கொள்ளையடித்தும் மாறனின் சீற்றம் தணியவில்லை. அவன் பொன்னி நாட்டுப் பெண்களின் தலைமுடியை அறுத்து எடுத்தான்; அதைக் கயிறுகள் ஆக்கினான். மருதனுடைய யானைகளை அக்கயிறுகளால் கட்டித் தன் நாட்டிற்கு இழுத்து வந்தான். இதிலிருந்து அவன் எவ்வளவு கொடியவன் என்பதை அறிந்துகொள்ளலாம்.

**Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

13. புலவர்கள் ஏன் மாறனை நாடி வந்தனர் ?

1. மாறன் புலவர்களைத் தண்டிக்காததால்
2. மாறன் புலவர்களைக் கண்டு மகிழ்ச்சி அடைந்ததால்
3. புலவர்கள் மாறனைக் கண்டு ஆறுதல் அடைந்ததால்
4. மாறன் புலவர்கள் மீது மிகுந்த மதிப்பு கொண்டிருந்ததால் ( )

14. மாறன் எதில் அதிக ஆர்வம் காட்டினான் ?

1. புலவர்களை ஆதரிப்பதில்
2. குடிமக்களைக் காப்பாற்றுவதில்
3. பகைவர்களைக் கொடுமைப்படுத்துவதில்
4. மற்ற அரசர்களை அடிமைப்படுத்துவதில் ( )

15. மருதன் ஏன் குறிஞ்சி நாட்டை இரண்டாம் முறையாகத் தாக்கினான் ?

1. பொருள்களைக் கொள்ளையடித்துச் செல்ல எண்ணியதால்
2. தான் வீரன் என்பதை மாறனுக்கு உணர்த்த விரும்பியதால்
3. குறிஞ்சி நாட்டை முற்றாக அழித்துவிட எண்ணியதால்
4. மாறனைப் போரில் தோற்கடிக்க முடியும் என்று நம்பியதால் ( )

16. மருதன் குறிஞ்சி நாட்டிலிருந்து ஓடக் காரணம் என்ன ?

1. குறிஞ்சி நாட்டு மன்னன் அவனைத் துரத்தியதால்
2. அவன் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நினைத்ததால்
3. அவனுடைய குதிரைப் படைகள் தோற்று ஓடியதால்
4. போரில் அவன் மாறனுடைய வீரத்தைக் கண்டு பயந்ததால் ( )

17. மாறன் பொன்னி நாட்டில் புரிந்த மிகக் கொடுமையான செயல் என்ன?

1. பொருள்களை எல்லாம் கொள்ளையடித்தது
2. யானைகளைத் தன் நாட்டிற்குக் கொண்டு சென்றது
3. பெண்களை அவமானப்படுத்தியது
4. மருதனை வென்று அவனைச் சிறைப்படுத்தியது ( )

## B4 சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

18. தன்மையும்

1. இயல்பும்
2. பழக்கமும்
3. எண்ணமும்
4. விருப்பமும் ( )

19. கொடுமைப்படுத்துவதில்

1. சிறைப்படுத்துவதில்
2. அவமானப்படுத்துவதில்
3. பழித்துரைப்பதில்
4. துன்புறுத்துவதில் ( )

20. ஊக்கம்

1. பலம்
2. ஆர்வம்
3. துணிவு
4. வீரம் ( )

PRELIM PR 6

**B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.

# பளிச் பளிச் புகைப்படக் கடை

*எங்கள் திறப்புவிழாவை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்குச் சிறப்புச் சலுகைகள் காத்திருக்கின்றன!*



**4 உறுப்பினர்கள் கொண்ட குடும்பப் புகைப்படம் - $100**

- அனைவருக்கும் ஒப்பனை செய்யப்படும்
- எங்கள் ஆடைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்
- எட்டு 4R புகைப்படங்களும், ஒரு 8R புகைப்படமும் தரப்படும்
- ஒவ்வொரு கூடுதலான நபருக்கும் $20



**இரண்டு நெருங்கிய நண்பர்கள் புகைப்படம் - $40**

- இருவருக்கும் ஒப்பனை செய்யப்படும்
- சொந்த ஆடைகளைப் பயன்படுத்தவும்
- ஐந்து 4R புகைப்படங்கள் தரப்படும்
- ஒவ்வொரு கூடுதலான நபருக்கும் $15

**பயண ஆவணப் புகைப்படம் - $5 மட்டுமே!**

- பத்து 2R புகைப்படங்கள் தரப்படும்

*முதல் 20 வாடிக்கையாளர்களுக்கு மேலும் 15% அளிக்கப்படும்!*

**முகவரி**
12, சைனா டவுன்
சாலை
சிங்கப்பூர் 160212

**திறந்திருக்கும் நேரம்**

வார நாட்கள்: காலை 11 மணி முதல் இரவு 8 மணி வரை
வார இறுதி நாட்கள்: - காலை 11 மணி முதல் இரவு 5 மணி வரை

விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

21. எதை முன்னிட்டு சிறப்பு சலுகைகள் வழங்கப்படுகின்றன?

1. கடை திறப்பு விழாவை முன்னிட்டு
2. புகைப்படக் கடையின் பெயரை முன்னிட்டு
3. அதிகமான வாடிக்கையாளர்களை முன்னிட்டு
4. குடும்பப் புகைப்படம் எடுப்பதை முன்னிட்டு ( )

22. நான்கு உறுப்பினர்கள் கொண்ட ஒரு குடும்பம் புகைப்படம் எடுத்தால் எவற்றையெல்லாம் பெறலாம்?

1. ஒப்பனை, ஆடைகள், எட்டு 2R மற்றும் ஒரு 8R புகைப்படங்கள்
2. ஒப்பனை, 2 ஆடைகள், நான்கு 4R மற்றும் ஒரு 8R புகைப்படங்கள்
3. ஒப்பனை, ஆடைகள், ஐந்து 4R மற்றும் பத்து 2R புகைப்படங்கள்
4. ஒப்பனை, ஆடைகள், எட்டு 4R மற்றும் ஒரு 8R புகைப்படங்கள் ( )

23. பளிச் பளிச் புகைப்படக் கடை ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் செயல்படும் நேரம் என்ன?

1. காலை 11 மணி முதல் இரவு 11 மணி வரை
2. காலை 11 மணி முதல் இரவு 8 மணி வரை
3. காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை
4. காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை ( )

'ஆ' பிரிவு

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

**Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| 24. மாறனும் ராமனும் சேற்றில் புரண்டு சண்டையிட்டார்கள். அவர்களின் சீருடையில் படிந்த ________ கண்டு தாயார் கடுஞ்சினம் கொண்டார். | 24. (        ) |
| 25. பணிப்பெண்களைக் கொடுமைப்படுத்துவது சட்ட விரோதமான செயலாகும். அதனை மீறுபவர்களுக்கு ________ தண்டனை விதிக்கப்படு | 25. (        ) |
| 26. உயரப் பறந்துகொண்டிருந்த பட்டம், திடீரென நூல் ________ வானத்திற்குள் மறைந்தது. அதைக் கண்ட சிறுமி அழத் தொடங்கினாள். | 26. (        ) |
| 27. சரண் மிகவும் குறும்புக்காரன். அவன் மரத்தில் இருந்த ________ கூட்டைக் கலைக்க முயன்றபோது கால் தடுக்கி கீழே விழுந்தான். | 27. (        ) |
| 28. பாட்டி சந்தையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அவர் ________ ப் பைகளைத் தூக்குவதைப் பார்த்த காவ்யா அவருக்கு உதவி செய்ய விரைந்தாள். | 28. (        ) |

| | | | | |
|---|---|---|---|---|
| 1) அருந்து | 3) சிரை | 5) கனம் | 7) குளவி | 9) கரையை |
| 2) அறுந்து | 4) சிறை | 6) கணம் | 8) குழவி | 10) கறையை |

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

நாம் உடல் உறுதி பெறச் சோற்றுடன் காய்கறி, முட்டை, இறைச்சி, மீன், பால், பழங்கள் முதலியவற்றை உண்ண வேண்டும். இவ்வுணவுகள் நம் உடல் வளரவும் உறுதி பெறவும் உதவுகின்றன. உணவை நன்றாக __(29)__ சாப்பிட வேண்டும். அவ்வாறு உண்டால் உணவு __(30)__ சீரணமாகும். 'நொறுங்கத் தின்றால் __(31)__ வாழலாம் என்பது பழமொழி. நல்ல உணவு உண்பதால் __(32)__ உடல் உறுதி பெறாது. நமது உடலில் பல __(33)__ உறுப்புகளும் இருக்கின்றன. இவை யாவும் நன்முறையில் __(34)__ நாம் நாள்தோறும் மாலை வேளையில் உடற்பயிற்சி செய்யவோ ஓடியாடி விளையாடவோ வேண்டும். மாலையில் உற்சாகமாக ஓடியாடி விளையாடுபவர்கள் இரவில் __(35)__ உறங்குகிறார்கள். நாம் இரவில் எட்டு மணி நேரமாவது நித்திரை கொள்ள வேண்டும். அப்போது தான் நமது உடலுக்குப் போதுமான ஓய்வு கிடைக்கும்.

29. (     )
30. (     )
31. (     )
32. (     )
33. (     )
34. (     )
35. (     )

| | | |
|---|---|---|
| 1) நம் | 2) எளிதில் | 3) கைகளும் |
| 4) தசைகளும் | 5) கடித்து | 6) மட்டும் |
| 7) சோர்ந்து | 8) எப்போதும் | 9) இயங்க |
| 10) அயர்ந்து | 11) மென்று | 12) நூறாண்டு |

D8 சுயவிடைக் கருத்தறிதல்
பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

நெப்போலியன் எப்போதும் தன் வெள்ளைக் குதிரை மீது அமர்ந்த வண்ணம் தூங்கிக் கொண்டிருப்பாராம். இதை அறிந்த பலர் நெப்போலியனைப் பற்றித் தவறாகப் பேசுவார்களாம். அதற்கு நெப்போலியன், "புறாக் கூண்டில் வரிசையாக அறைகள் இருப்பதைப் போன்று என் மூளையில் கடமைகளை வரிசையாக அடுக்கி வைத்திருப்பேன். எந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டுமோ அந்தக் கடமை இருக்கும் அறையின் கதவை அப்போதைக்குத் திறப்பேன். அதைப் பற்றி மட்டுமே யோசனை செய்வேன். மற்ற கடமைகள் இருக்கும் அறைகளின் கதவுகளை எல்லாம் மூடி விடுவேன். அவற்றைப் பற்றி யோசிப்பதில்லை. ஆதலால் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் நான் குழப்பம் அடைவதில்லை. வீணான எண்ணங்களுக்கும் நான் இடம் தருவதில்லை. தூங்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்படும்போது நான் என் சிந்தனைக் கதவுகளை மூடிவிட்டுத் தூங்கிவிடுவேன். அதனால் தன்னால் ஊக்கமுடனும் தைரியத்துடனும் செயல்பட முடிகிறது. அதுவே வெற்றியின் ரகசியம்" என்று விளக்கம் தந்தார்.

சிறு வயதில் நெப்போலியன் ஒரு ராணுவ விடுதியில் படித்து வந்தார். அச்சமயம் அவருடன் அதே அறையில் மற்றொரு மாணவரும் தங்கிப் படித்து வந்தார். ஒரு சமயம் அம்மாணவனின் பை ஒன்று காணாமல் போய்விட்டது. அறையில் தன்னுடன் தங்கியிருக்கும் நெப்போலியன் தான் எடுத்திருப்பார் என்று எண்ணி அம்மாணவன் மேலதிகாரியிடம் சென்று முறையிட்டான். மேலதிகாரி நெப்போலியனை அழைத்தார். நெப்போலியனிடம் ஒன்றும் விசாரிக்காமல் கம்பை எடுத்துக் கண்மண் தெரியாமல் அடிக்கத் தொடங்கினார். இடையே அடியை நிறுத்தாமல் "ஏன் திருடினாய்? இனிமேல் அவ்வாறு செய்வாயா?" என்று கேட்ட வண்ணம் தொடர்ந்து அடித்தார். நெப்போலியனும் அடியெல்லாம் வாங்கிக் கொண்டு பொறுமையாக இருந்தார். எதுவும் பேசவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு புகார் செய்த மாணவன் மேலதிகாரியிடம்; "தன பையைத் திருடியது வேறொருவன்; நெப்போலியன் இல்லை," என்று கூறினான். தனக்கு இப்போதுதான் உண்மை தெரிந்தது. தெரியாமல் நெப்போலியன் மீது புகார் கொடுத்து விட்டேன், என்னை மன்னித்து விடுங்கள் என்றும் கூறினான்.

தான் தீர விசாரிக்காமல் செய்த தவற்றை அப்போதுதான் மேலதிகாரி உணர்ந்தார். உடனே நெப்போலியனின் அறைக்குச் சென்றார். அவர் நெப்போலியனிடம், "உன் மீது தவறு இல்லாதபோது ஏன் நான் அடிக்கும்போது தடுக்கவில்லை? அல்லது நான் கேட்கும் போதாவது என்னிடம் உண்மையைக் கூறியிருக்கலாமே; ஏன் ஒன்றுமே சொல்லாமல் அமைதியாக இருந்தாய்?" என்று வினவினார். அதற்கு நெப்போலியன், "ஐயா! நீங்கள் அடிக்கும் முன்பே கேட்டிருந்தால் உண்மையைக் கூறியிருப்பேன். அடித்துக் கொண்டே கேட்டதால், "நான் இல்லை" என்று சொல்லியிருந்தால், அடிக்குப் பயந்துதான் நான் அப்படிச் சொன்னதாக நினைப்பீர்கள். நான் பயந்ததாக யாரும் நினைக்கக் கூடாது. அதைவிட அடி வாங்குவது மேல்" என்று பதிலளித்தார். ஒரு வீரனுக்கு எதையும் தாங்கும் இதயம் இருந்தால் தான் நாட்டைக் காக்கும் தைரியம் ஏற்படும். பயப்படுபவனால் எதையும் சாதிக்க முடியாது என்று மேலும் கூறினார். நெப்போலியன் மாவீரன் என்பதை இக்கதை விளக்குகிறது அல்லவா?

**Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)**

---

36. நெப்போலியனால் எவ்வாறு குழப்பமின்றிப் பிரச்சனைகளைத் தீர்க்க முடிந்தது? (4)

37. நெப்போலியன் வெற்றி அடையக் காரணம் என்ன? (3)

38. மாணவன் எதனால் நெப்போலியன் தன் பையை எடுத்தான் என்று மேலதிகாரியிடம் புகார் செய்தான்? (3)

39. மேலதிகாரி நெப்போலியனை விசாரிக்காமல் ஏன் அடிக்கத் தொடங்கினார் ? ( 3 )

40. மேலதிகாரி தீர விசாரித்து முடிவெடுக்க வேண்டும் என்பதை எப்போது உணர்ந்தார் ? ( 3 )

41. நெப்போலியன் ஏன் உண்மையைக் கூறவில்லை ? ( 4 )

PRELIM PR 6

## Answer Key : PRELIM ÷6 . ( PR 6 )

'அ' பிரிவு

வேற்றுமை

1. (2)
2. (3)
3. (4)
4. (2)
5. (1)
6. (3)

செய்யுள்

7. (3)
8. (2)
9. (1)
10. (4)
11. (2)
12. (3)

தெரிவுவிடைக் கருத்தறிதல்

13. (4)
14. (3)
15. (4)
16. (4)
17. (4)

சொற்பொருள்

18. (4)
19. (2)
20. (3)

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

21. (1)
22. (4)
23. (2)

'ஆ' பிரிவு

ஒலி வேறுபாடு

24. (10)
25. (4)
26. (2)
27. (7)
28. (5)

முன்னுணர்வுக் கருத்தறிதல்

29. (11)
30. (2)

PRELIM PR 6

P6 PRELIMINARY
TESTPAPER 14

31. (12)
32. (6)
33. (4)
34. (9)
35. (10)

<u>சுயவிடைக் கருத்தறிதல்</u>

36. நெப்போலியன் எந்தக் கடமையைச் செய்ய வேண்டுமோ அதைப்பற்றியே குறிப்பாகச் சிந்தித்து மற்றவற்றைப் பற்றிய சிந்தனைகளுக்கு இடங்கொடுக்காமல் இருந்ததால் அவரால் குழப்பமின்றிப் பிரச்சனைகளைத் தீர்க்க முடிந்தது.

37. நெப்போலியன் வீணாக எதையும் சிந்தித்து மனஉளைச்சலை ஏற்படுத்திக் கொள்ளாமல் உறக்கம் வரும்போது தம் சிந்தனைக் கதவுகளை மூடி விட்டு நன்றாக உறங்கியதால் அவர் எதையும் தைரியத்துடனும் ஊக்கத்துடனும் செயல்பட்டு வெற்றி அடைய முடிந்தது.

38. நெப்போலியனும் அந்தச் சிறுவனும் ஒரே அறையில் தங்கி இருந்ததால் நெப்போலியன் தான் அவனுடைய பையை எடுத்திருக்க வேண்டும் என்று எண்ணி சிறுவன் மேலதிகாரியிடம் புகார் செய்தான்.

39. சிறுவனும் நெப்போலியனும் ஒரே அறையில் தங்கி இருந்ததால் சிறுவனின் பையை வேறு யாரும் எடுத்திருக்க முடியாது என்று மேலதிகாரி தானாக முடிவெடுத்து எதையும் விசாரிக்காமல் நெப்போலியனை மேலதிகாரி அடித்தார்.

40. சிறுவன் சிலநாட்களுக்குப் பிறகு பையைத் திருடியது நெப்போலியன் அல்ல, என்ற உண்மையை அறிந்து வந்து மேலதிகாரியிடம் கூறியபோது தான் எதையும் தீர விசாரித்து முடிவெடுக்க வேண்டுமென்பதை மேலதிகாரி உணர்ந்தார்.

41. மேலதிகாரி அடிப்பதற்கு முன்பாகவே விசாரித்திருந்தால் நெப்போலியன் உண்மையைக் கூறியிருப்பார். அடித்துக் கொண்டே கேட்டதால் அடிக்குப் பயந்து 'தான் செய்யவில்லை' என்று கூறுவதாக மேலதிகாரி எண்ணி தன்னை கோழை என்று நினைத்து விடுவார் என்பதற்காக அவர் உண்மையைக் கூறவில்லை.